**மாத்தளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 ஏப்ரல் 30 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கவுடுபெலெல்ல நீர் விநியோகத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 518,419 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 952,866 தொகை ரூபா 1,191,082 எனக் கடன்பட்டோர் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பொதுக் கிணறைப் புதுப்பிப்பதற்கு செலவான தொகை ரூபா.359,630 ஆக இருந்த போதிலும், கணக்கில் ரூபா.350,000 எனக் கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | திருத்தச் செலவான ரூபா.689,332 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ரூபா.100,000 பெறுமதியான காணி, இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | மீளாய்வாண்டில் ரூபா.178,000 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த காவலரணின் பெறுமதி தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கின் கீழ் ரூபா.147,000 தொகை என காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளை சீராக்கம் செய்தல் | 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.2 **கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | கிடைக்க வேண்டிய கணக்குகள் | | |
| | 1 ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் 5 ஆண்டு களுக்கும் குறைவான ரூபா 3,710,394 ஆன மீதி மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,404,959 ஆன மீதி காணப்பட்டதுடன், 2020 ஜூன் 02 ஆம் திகதி வரை ரூபா 57,529,675 பெறுமதியான மேலும் இன்னும் அறவிடப்பட வேண்டி இருந்தது. | கிடைக்க வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 1 ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் 5 ஆண்டு களுக்கும் குறைவான ரூபா 5,768,318 தொகை மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ள ரூபா 2,493,166 மீயொன்று காணப்பட்டது. | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செலுத்தப்பட வேண்டிய தொகையை விரைவில் கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.3.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

**தகவல்களை சமர்ப்பிக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 9,385,805 கூட்டுப் பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரிய எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | உரித்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அட்டவணைகளை தயாரிக்க மற்றும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல். | சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்துவதற்கு, சரியான அட்டவணைக்களைத் தயாரிப்பதற்கும் உறுதிப்படுத்தும் கடிதங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி. பி. 571 (3) | 595,799 | 2012 முதல் 2019 கால பகுதிக்குரிய நிர்மாண பிடிகாசு மற்றும் நானாவித வைப்பு கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புகள் தீர்க்கப்படல் வேண்டும். | நிதி பிரமாணங்கள் பிரகாரம் கணக்குகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,664,748 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,712,130 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

-----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,349,000 | 1,237,854 | 817,284 | 548,453 | 5,276,200 | 1,247,088 | 3,353,109 | 584,442 |
| வாடகை | 2,075,000 | 400,800 | 583,910 | 29,285 | 1,405,000 | 390,020 | 551,325 | 26,095 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,250,000 | - | 1,666,575 | - | 1,400,000 | - | 1,406,392 | - |
| ஏனைய வருமானம் | 66,855,000 | 41,339,074 | 18,970,164 | 26,170,544 | 22,026,000 | 7,372,742 | 17,277,605 | 3,709,745 |
| மொத்தம் | 72,529,000 | 42,977,728 | 22,037,933 | 26,748,282 | 30,107,200 | 9,009,850 | 22,588,431 | 4,320,282 |

### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு ஏற்ப வீத வரி மதிப்பீடு செய்யப்படாமல் 2012 ஆம் ஆண்டின் வீத வரி மதிப்பீட்டின் பிரகாரம் வரிகள் அறவிடப்பட்டு வந்தன. | மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு வரிகள் அறவிடப்படல் வேண்டும். | பதில்கள் அளிக்கப்படவில்லை. |

### 2.2.3 நீர் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,210,959 பெறுமதியான நிலுவை நீர் கட்டணங்கள் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவிட முடியாத நிலுவைத் தொகையை முறையான அனுமதியின் கீழ் பதிவழிக்கவும், எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடவும் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 12 நீர் விநியோகத் திட்டங்களின் நீரானது அருந்துவதற்கு உகந்த நிலையில் காணப்படுகிறதா என்பதை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நீர் மாதிரியைப் பரிசோதித்துப் பார்க்காமல் நீர் விநியோகம் செய்யப்பட்டிருந்தது. | தரமான மற்றும் தூய்மையான குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நீர் விநியோகத் திட்டங்களில் நீரின் தரம் குறித்த அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை கட்டணங்களுக்கு உரிய 2019 திசெம்பர் 31 திகதி வரையான ரூபா 1,660,825 பெறுமதியான தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | மிகை கட்டணங்களை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மிகை கட்டணங்களை சபை நிதியத்திற்கு செலவு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் பணிகளை நிறைவேற்றும் போது இனங்காணப்பட்டிருந்த 02 உப விதிகளை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உபவிதி விதிகள் பிறப்பிபதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | உப விதிகளை மிக விரைவில் தயாரிப்பதற்கு் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கை விடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீடு கண்டறியப்படாத 52 வேலைத் திட்டங்கள் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை | முன்னைய ஆண்டின் திட்டங்களை சரியாக அடையாளம் கண்டு திட்டமிட்டு, வேலைத் திட்டங்களை செயற்படுத்தல் வேண்டும். | திட்டமிடப்பட்டிருந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனதால் எதிர் காலத்தில் இவ்வாறான குறைகளைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

**(இ) எதிர்பார்த்த விளைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்ளாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் இருந்து வீதவரி வரி தொடர்பாக செயற்படுத்தப்பட்டிருந்த கணினி மென்பொருள் மற்றும் 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட நீர் வருமானம் தொடர்பாக செயற்படுத்தப்பட்டிருந்த கணினி மென்பொருள் செயற்பாட்டுநிலைமையில் காணப்படவில்லை. | யெற்பாட்டு நிலைமைக்கு கொண்டுவர வேண்டும் | கணினி மென்பொருளைத் தயாரித்து செயற்படுத்துவதற்காக கொள்வனவு செய்வதற்கு அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படாமையால் இந்த சபையின் சேவைகளின் செயற் திறன் மற்றும் வினைத்திறனாகவும் அபிவிருத்தி செய்ய இயலாமல் உள்ளது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி *NP/SP/SDG/17* இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு ரூபா 1,800,000 பெறுமதியான தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் மிகவும் வெற்றிகரமான நிகழ்ச்சிக்கு ஏற்ப உரிய ஆண்டிலேயே நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக திட்ட வரைபடங்களை அனுமதிப்பதற்கு கடந்த 03 ஆண்டுகள் கால பகுதிக்குள் 980 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று அவற்றுள் 800 அனுமதிக் கப்பட்டிருந்த போதிலும், 76 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | சபையின் மீண்டெழும் வருமானத்தை பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் ரூபா 55,362,765 தொகை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | மீண்டெழும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும். | முதலீட்டுக்கான வட்டித் தொகையையும் உரிய பிரதேச மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் இட இயலும் என்பதோடு, வரவிருக்கும் பொருளாதார புதிய உத்திகளை சபை இனங் கண்டிருப்பதாலும் இந்த முதலீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | லொக்நகர்வத்த காணியை, துண்டுகளாக பிரித்து விற்பதற்காக 2018 மார்ச் அனுமதி அளிக்கப்பட்டுள்ள போதிலும், பொது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சபைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 65.2 பேர்ச் அளவிலான 4 காணித் துண்டுகளை சபைக்குப் பொறுப்பேற்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணித் துண்டுகளின் உரித்தினைப் பொறுப்பேற்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | காணியைப் பொறுப்பேற்று உரித்துப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் வருகின்றன. |

3.3 மனித வள முகாமைத்துவம்
-----------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------- | ----------------- | ---------------------------- |
| (அ) | 2019 ஆம் ஆண்டில் 43 நாட்கள் மற்றும் 2020 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் சேவைக்கு அறிக்கையிடாமல் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை பின்பற்றப்படல் வேண்டும். | 43 நாட்கள் சம்பளற்ற விடுமுறையெனக் கருதி மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழித்துக் கொள்வதோடு, வருங்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெற்றால் தாபன விதிக்கோவையின் விதிமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபையின் பதவியணியின் 12 பதவிகளில் 32 வெற்றிடங்களும் 6 பதவிகளில் 12 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து பதவிகளின் தேவைகளுக்கான அங்கீகாரத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்ளூராட்சி மன்றங்கள் திணைக்களம் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப இணைத்துக் கொள்ளப்பட்ட காரணத்தால் மிகைகள் உருவாகியுள்ளன. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| துண்டுகளாக்கப்பட்டு பிரித்து விற்பனை செய்யப்பட்ட கிரிகல்பொத்த பெரதேவாலே வத்த காணியின் நூற்றுக்கு 1 வீத வரித் தொகையில் ரூபா 185,130 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரித் தொகைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 30,000 பெறுமதியான 6 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் மோட்டார் சைக்கிளொன்றை ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | முறையாக கைதவிர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.5.2 வாகனங்கள் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா.1,400,000 தொகை பெறுமதியான பார்ம் ட்ரக்டர் 2018 மே மாதம் தீப்பிடித்தமை தொடர்பாக நிதி பிரமாணங்கள் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனத்தைப் பழுதுபார்க்க ரூபா.89,990 செலவு செய்யப்பட்டிருந்தது. | அறிக்கைகளை உடனடியாகப் பெற்றுக் கொண்டு பரிந்துரைகள் செயற்படுத்தப்படல் வேண்டும். | நிதி பிரமாணம் 104(3) இறுதி அறிக்கையைப் பெற்று மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத் தருகிறேன். |

3.6 **ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) இஹல ஹரஸ்கம வீதியின் பக்கச் சுவர்களை நிர்மாணித்தல் - ரூபா.448,624 | | |
| உரிய பணியை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபையுடன் ரூபா.500,072 பெறுமதியான தொகைக்கு ஒப்பந்தம் செய்திருந்த ஒப்பந்த சங்கத்தால் அந்தப் நிர்மாணத்தை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவருக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். | உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது நிரூபிக்கப்பட்டால், சங்கத்தை கறுப்பு பட்டியலில் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் அறிக்கையின் பிரதியை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |